மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1975).

The Hon. Thiru O. P. RAMAN : Mr. Deputy Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Chit Funds (Amendment) Bill@, 1975 (L.A. Bill No. 19 of 1975), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

According to sub-section (1) of section 12 of the Tamil Nadu Chit Funds Act, 1961 (Tamil Nadu Act 24 of 1961), for the proper conduct of the Chit every foreman shall, before applying for the certificate of commencement, execute an indenture of mortgage and trust in favour of the Registrar as trustee charging by way of security, property sufficient for the realisation of the chit amount, or deposit in any approved bank an amount of cash not less than half of the Chit amount, or invest in Government securities the face value or market value of which is not less than half of the chit amount and transfer the amount so deposited or the Government securities in favour of the Registrar to be held in trust by him as security.

At present, the cash deposit is made in the name of the foreman and then transferred in favour of the Registrar. Both the Courts and Banks have held that fixed deposit receipts are not transferable, thereby rendering the security itself ineffective. The quantum of security under the

@ 417-419 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

existing provisions of the Act is based on one chit amount. It does not vary according to the number of instalments or duration of a chit. The element of risk is greater in long-term chits and it warrants greater security. In order to remove all these difficulties and to provide adequate safe-guard to the subscribers and to guard against defaults, it is proposed to amend section 12 of the Tamil Nadu Chit Funds Act, 1961 so as to provide for the deposit with the Government, of cash security instead of the various forms of securities now provided for. The quantum of security will be based on the number of instalments of each chit, ranging from one chit amount for chits of not more than 20 instalments to four times the chit amount for chits of more than 60 instalments. Interest will be paid on the amount of cash security deposited by the foreman at the rates to be specified in the rules. While making the rules, it will be ensured that the rates are in conformity with the commercial bank rates. Consequential amendments to certain other sections of the Act have also been proposed.

The Act as proposed to be amended will apply only to chits commenced after the date of commencement of the proposed Amendment Act.

Sir, I commend the motion for the acceptance of the House.

THIRU G. SWAMINATHAN : Sir, with your permission, I will make certain observations on the amendment to the Tamil Nadu Chit Funds Act, 1961. I feel, Sir, that this is a half-hearted measure and I do not think that by the present Bill, the Government will be able to protect the subscribers and the reason for saying this is : "Chit" is defined under section 2 (2) of the Act and certain types of chits are being exempted from that definition. Under the Explanation to section 2 (2), a transaction will not be a chit if "all the subscribers get the whole of the chit amount by turns with a liability to pay future subscriptions." I will mention the illustration given in the Act itself. There are 100 subscribers to a chit and the subscription by each of them is Rs. 100. All the subscribers get by turns Rs. 10,000 being the whole of the chit amount and are liable to pay future subscriptions. So, this chit company will be exempted under the present Act. Most of the chit companies in Tamil Nadu and especially in Madras City who have defaulted in payment of the chit amounts to the various subscribers belong to this category and I am sorry to find that there is no amendment for the very important definition of the chit fund.

Again, the Hon. Minister just now said that he had raised the deposit amount to be paid by the foreman. He says that for chits in which twenty instalments have to be paid, formerly only 50 per cent of the

amount need be paid by the foreman by way of a deposit and that formerly the deposit could be made by a sort of mortgage of a property or something else and that now the amount has to be paid in cash. But, even then there is a big lacuna there. Now, let us take the case of a person who runs a chit for Rs. 10,000 on 20 instalments of Rs. 500 each with 20 members. The amount that comes to the foreman is about Rs. 10,000 per month. For a period of 20 months, the gentleman will be able to collect an amount of Rs. 2 lakhs. Actually, now he has to pay a deposit of Rs. 10,000 whereas formerly he was paying a deposit of Rs. 5,000. But the amount taken by him over a period of three or four months itself will naturally come to about Rs. 30,000 or Rs. 40,000, while the deposit will be Rs. 10,000 only. I do not know how the present amendment will be able to protect people from this kind of defaulters. I have got a list of people who are defaulting in this manner. I do not know how the present Bill will be able to protect people from them.

Let us again suppose that a foreman does not pay the amount to the subscriber. What happens is that the subscriber will have to go to the Civil Court and he has to move for dissolution of the chit fund. If it happens to be a company, then it becomes all the more difficult to move for the dissolution of that particular company. No subscriber has got the energy or the time to move a Civil Court against a defaulting company and so, he will not be able to get back the money. This is another serious lacuna in the present Bill.

It is said in section 7 of the amending Bill that it will not apply to such of those companies as have already received the certificate of commencement before the amending Act. I want a clarification why those companies which have already received the certificate should be exempted.

In the observation of the Government on this Bill, in the Lower House, it was said that Government itself were proposing to run these chit companies. I think it is a good proposal. The Government may seriously think about running chit companies. Nowadays most of the people are fond of chit companies. The Government also will be able to get some money especially in view of the fact that they are now getting only a reduced income by way of lotteries.

Regarding deposits, it is said that interest at the rates for deposits given by the nationalised Banks will be given. I recommend that the interest may be given at least at the lending rates of the banks, to the foreman because most of the people are getting money from outside and depositing it in the Bank. Now, the Bank Deposit rate is 8 per cent, 9 per cent and sometimes 10 per cent. The lending rate of the Bank is 18 per cent. I would recommend that they may be paid 18 per cent.

Sir, I am informed that in many places in our State, especially in Tiruchirappalli, Thanjavur and other places, there are numerous chit companies. But, there is only one Registrar there and he is not able to cope with the work. So, the Registrar should be appointed on the basis of the number of chit companies available and also the load of work. I am told that the Registrar is over-worked and so the supervision of the chit companies is not effective and efficient.

I would request the Hon. Minister to look into these points and also clarify why the Amending Bill is not as serious as it was reported to be.

Thank you, Sir.

(பிற்பகல் 7-10.)

* திரு. கே. இராசாராம்: துணைத் தலைவரவர்களே, நண்பர் சுவாமிநாதன் அவர்கள் சொன்ன ஒரு குறை ஒருபுறமிருக்க இன்னொன்று ஏலச்சிட்டு என்றும் நடத்துகின்றார்கள். அநேகமாக இந்தத் திருத்தம் அவர்களைப் பொறுத்துத்தான் இருக்கின்றது. 20 தவணைகளில் உதாரணமாக, தவணை ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் செலுத்தினால், அந்தச் சீட்டுக்கு ரூ. 2,000 மொத்தம் வரும், நபர் ஒன்றுக்கு ஒவ்வொரு மாதமும் மொத்தம் 20 சப்ஸ்கிரைபர்கள் தான் இருப்பார்கள். அதில் இரண்டாவது, அல்லது நான்காவது சீட்டு என்று சீட்டுக்களை கமிஷனுகை யாருக்கும் ஏலம் விடாது முதல் பிடிதாரரே எடுத்துக்கொள்வார்கள். இந்தத் தொகையை அவர்கள் டெபாசிட் பண்ண வேண்டியதாக இருக்கின்றது. "an amount equal to the chit Amount" என்று. ஒரிஜினல் ஆக்டில் "சிட் அமௌண்ட்" என்றால் என்ன என்று டெபனிஷன் கொடுத்திருக்கிறார்கள்.

" chit amount means the sum total of the subscriptions payable by all the subscribers for any instalment of a chit without any deduction for discount or otherwise ".

அப்படியானால், ஒரு தவணைக்கு எல்லா சப்ஸ்கிரைபர்களும் சேர்ந்து செலுத்தக்கூடிய தொகை என்றாலும், அர்த்தம் இருக்கிறது. ஒரு தவணைக்கு 20 பேர் சேர்ந்து இரண்டாயிரம் ரூபாய் செலுத்துவார்களானால், 20 மாதங்களில் இருபது இரண்டாயிரம் ரூபாய் (ரூ. 40,000) அவர்களிடத்திலே சேர்கிறது. அப்படி மொத்தம் இருபது இரண்டாயிரம் என்று மொத்தம் ரூ. 40 ஆயிரம் வரையில் அவர்கள் கலெக்ட் பண்ணுகின்றார்கள். இருபது தவணைகளில் கலெக்ட் பண்ணுகின்றார்கள். ஆனால் அவர்களிடம் டெபாசிட் வாங்கப் போவது மொத்தம் இரண்டாயிரம் ரூபாய்தான். ஆக எந்த நோக்கத்தோடு இந்தத் திருத்தம் வந்ததோ அந்த நோக்கம் அடிபட்டுப்போகிறது.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு விஷயத்தை மறந்துவிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். வசூல் பண்ணுகிறார்கள் என்று சொன்னாலும், அந்தந்த மாதத்தில் திருப்பி எடுத்தவர்களுக்கு, ஏலம் எடுத்துவிட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டியும் இருக்கும். ஆக மொத்தமாக ரூ. 40,000 அவர்கள் கைக்கு வருவதில்லை. இரண்டாயிரம், இரண்டாயிரம் என்றுதான் நாற்பதாயிரம் ரூபாயும் வரும். வரும் போகும், வரும் போகும். சாதாரணமாக ஒரு மாதத் தவணைக்கு ரூ. 2,000 என்றுதான் வருமே தவிர, மொத்தம் ரூ. 40 ஆயிரமும் சேர்த்து அவர்கள் கைக்கு வருவதாக வைத்து வாதாடுவது சரியாக இருக்காது.

THIRU G. SWAMINATHAN : Many of the companies have not at all disbursed the amount for months together from the beginning. One of such companies is in Madras, by name, Monarch Trading Company. I think they have not paid to the tune of several thousands of rupees. For one party they have not paid Rs. 21,572 and for others they have not paid sums like Rs. 10,000, Rs. 24,000 and Rs. 25,000. They have not paid so many lakhs of rupees. There is also another company by name Uma Investment Company which has also not paid nearly one lakh of rupees. So, crores of rupees have not been paid. Even according to the present Act, what is the power ? One can go to the Civil Court for dissolution ; meanwhile he may be a defaulter for so many months. What is the protection given to the subscriber ? That is what I want to know.

THIRU S. T. ADITYAN : There may be such cases. I do not say that it is impossible. But such cases are actually by crooks and it is only crooks who are dealing in this way. The only thing that is left for an ordinary subscriber will be to rush to the Criminal Court and have him prosecuted. It may not be possible for the ordinary subscriber to get any such security in a Civil Court. I am not saying that security should be reduced. I am not saying like that. But I am only pointing out the fallacy in saying that the security should be equal to the total amount. It cannot be equal to the total amount. No chit transaction can be made that way. Well, I am aware of one or two cases which have been extreme frauds. But they should be treated only as fraudulent transactions under the ordinary criminal law of the country.

THIRU G. SWAMINATHAN : Sir, there are so many fraudulent cases........

THIRU S. T. ADITYAN : Sir, I come from a place where chit funds are more prevalent than in any other district.

Thiru C. V. RAJAGOPAL : Sir, all these things should be replied to only by the Hon. Minister himself and not by my hon. Friend.

Thiru G. SWAMINATHAN : Sir, there have been so many fraudulent companies and so many such cases. It has been found that the subscribers are not able to move the Civil Court under section 38 of the Act because it takes such a long time to dissolve the company. If it happens to be a limited company, it is more difficult. We have to see that the innocent people are protected. It is only for that purpose that the amendments are supposed to have come. My own feeling is that it will not protect the subscribers. Another method is asking for the full amount and I must welcome it. I only say that this will not protect the interest of the subscribers of the chit companies.

திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, நண்பர் திரு ஆதித்தன் அவர்கள் நன்றாக ஒழுங்காக நடத்துபவர்களைப்பற்றிப் பேசுகின்றார்கள். அதைப்பற்றிப் பிரச்சினையே இல்லை. அவர்களைப்பற்றி சட்டமே தேவையில்லை. இப்போதுள்ள பிரச்சினை தவறாக நடப்பவர்களிடமிருந்து சப்ஸ்கிரைபர்களை எப்படி காப்பாற்றுவது என்பதுதான். வேறு ஒன்றுமில்லை.

THIRU S. T. ADITYAN : I want to say that the security will not be sufficient. The provisions of the Criminal Law will have to be enforced.

திரு. கே. ராஜாராம் : இப்போது நான் அதைப்பற்றிச் சொல்லவரவில்லை. எலத்தில் எடுத்தால் அவர்கள் உடனே பணம் கொடுப்பது வழக்கமில்லை. பெரும்பாலான கம்பெனிகள் 3, 4, 5 மாதங்கள் இழுத்தடிக்கின்றார்கள். 6 மாதம் கூட இழுத்தடிக்கின்றார்கள். நான் சொல்வது இத்தனை பெரிய "அமெண்டுமெண்டு" கொண்டுவருவதற்குப் பதிலாக ஒரு சிறு "அமெண்ட்மெண்ட்" கொண்டுவந்தால் போதும். அதாவது எலத்தில் எடுத்தால் எடுத்தவருக்கு 30 நாட்களுக்குள் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் "டிசால்வ்" பண்ணவேண்டும். அந்தமாதிரி "அமெண்ட்மெண்ட்" கொண்டுவரவேண்டும். அந்த மாதிரி கொண்டுவந்தால்தான், மக்களைப் பாதுகாக்க முடியுமே தவிர, பொதுவாக டெபாசிட் பண்ணுவது என்றால், 6 மாதம், 8 மாதம் பணம் கட்ட வேண்டுமென்றால்; அவர்களுக்கு வட்டி கட்டாது. நன்றாக நடத்துபவர்களுக்கு ரொம்பக் கஷ்டமாகிவிடும். சீட்டு நடத்துவதிலே நஷ்டம்தான் வரும்.

THIRU S. T. ADITYAN : Why should the subscriber wait for 30 days to get back his money ? Why not he be paid the next day ? I would rather suggest " the next day ".

திரு கே. ராஜாராம்: நான் சொல்வது ஒரு நாளில் என்றுகூட வேண்டாம். ஒரு மாதத்திலே கொடுத்தால் போதும். "Within thirty days" பணம் கொடுக்கத் தவறினால், அடுத்த இன்ஸ்டால்மெண்ட் யாரும் செலுத் தாமல் டிசால்வ் பண்ண ஏற்பாடு பண்ணவேண்டும். அப்படி இருந்தால் ஒரு மாதப் பணத்தை டெபாசிட் பண்ணினால் போதும். இந்த விஷயத்தைப் பற்றி அரசு யோசிக்க வேண்டும். இன்று இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டா வது கொண்டுவாருங்கள். 30 நாளைக்குள்ளே கொடுக்கவில்லையானால், "டிசால்வ்" பண்ணவேண்டும் என்று சொல்கின்றேன்.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்: தலைவரவர்களே, இந்தத் தமிழ் நாடு சீட்டு நிதி திருத்தச் சட்டம் இப்போது நடைமுறையிலே இருக்கின்ற சட்டத்திலே சிறிது முன்னேற்றத்தைக் கொண்டுவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய யோசனை நல்ல முறையிலே பரிசீலிக்க வேண்டியது என்பதை நான் முதலிலேயே ஏற்றுக்கொள்கிறேன். இப் போது இருப்பதிலே சற்று அதிகமாகப் பாதுகாவல் கொடுக்கப்படுவதற் காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் படுகிறது. உதாரணமாக, ஒரு 100 ரூபாய் 10 சீட்டு பிடிப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். 20 மாதம் அப்படிப் பிடிப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இப்போது இருக்கிற விதிப் படி ரூபாய் 500 தான் கட்டவேண்டியிருக்கின்றது. இப்போது திருத்தி யிருக்கின்ற விதிப்படி அதற்கு ஆயிரம் ரூபாய் கட்டவேண்டும். சொத்து மதிப்பாகத்தான் காட்டி விடுகின்றார்கள். பிக்ஸட் டெபாசிட் காட்டிவிடுகின்றார்கள். நீதிமன்றங்களிலே பிக்ஸட் டெபாசிட்டை நடத்துபவர்கள் பெயரில் வைத்திருப்பதை மாற்றுவது சரியில்லை என்று ஒரு கருத்து சொல்லப்பட்டது. அதற்காக ஒரு மாற்றம் கொண்டுவரு கின்றபோது இந்தத் தொகையைச் சற்று அதிகப்படுத்தலாம் என்ற அளவிலே இரண்டு மடங்காக ஆக்கப்பட்டிருக்கின்றது. நாட்டுடமை ஆக்கப் பட்ட வங்கியிலே அல்லது வேறு வங்கியிலே கட்டுவதற்குப் பதிலாக அரசாங்கத்திற்கு நேரடியாகப் பணமாகக் கட்டவேண்டும் என்று சொல் கின்றோம். அப்படிக் கட்டிவிட்டால், அதற்குரிய வட்டியை அரசாங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

நண்பர் திரு. சுவாமிநாதன் சொன்னதுபோல, இதன் மூலமாக முழுப் பாதுகாப்பு கொடுக்கமுடியுமா முடியாதா என்பது ஒரு சர்ச்சைக்குரியது என்பதை நானும் ஒத்துக்கொள்கின்றேன். இப்போது இருக்கின்ற நிலை மையிலே சற்று முன்னேற்றம். ஒரு பங்கு, இரண்டு பங்கு, மூன்று பங்கு, நான்கு பங்கு என்று அதிகமான தவணைகள் சீட்டுப் போடுவதிலே தான் சில தவறு நடைபெறுவதாக அரசின் கவனத்திற்கு வந்திருக் கின்றது. இப்போது 24 ஆயிரம் சீட்டுக் கம்பெனிகள் இருப்பதாக கணக் குச் சொல்லப்படுகிறது. அதிலே அதிகமாகத் தவணைகள் நிர்ணயித்து நடத்துகின்ற சீட்டுகளில்தான் தவறு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை உணர்ந்துதான் குறைந்த தவணை உள்ளவர்கள் செக்யூரிட்டி யைக் குறைவாகக் கட்டலாம், தவணைகள் அதிகமாக அதிகமாக செக்யூ ரிடி பணம் அதிகமாகக் கட்டவேண்டும் என்று இருக்கின்றது. 20 தவணை கள் இருக்குமானால் எவ்வளவு சீட்டுத் தொகையைக் கட்டவேண்டுமோ அதைப்போல இரண்டு மடங்கு 40 தவணை இருக்குமானால் கட்டவேண்டும், 60 தவணை இருக்குமானால் 3 மடங்கு கட்டவேண்டும். இதற்கு மேலே

இருக்குமானால் 4 மடங்கு கட்ட வேண்டும். அரசாங்கத்திற்கு இப்படிக் கட்டவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தச் சிரமம் எல்லாம் வருகின்ற சீட்டுகளைப் பார்த்தால் அதிக நாட்களாகப் பணத்தைச் சேர்ப்பவர்கள்தான் திடீரென்று மறைந்து விடுகிற மாதிரி இருக்கின்றது. குறுகிய காலச் சீட்டுகள் நடத்துவதிலே அதிகத் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, சாதாரண அளவிலே இருக்கின்ற குறைபாடுகளை நீக்கும் முறையிலே தான் இந்த மாற்றம் இருக்கின்றது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாகச் சட்டம் கொண்டுவரவேண்டும், உடனே சீட்டுக் கம்பெனிகளைக் கலைக்கவேண்டும், கடுமையாக்க வேண்டும் என்பதிலே நல்ல யோசனையாக அது இருக்கின்றது.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்கள் தவறு செய்து விட்டால், ஒரு மாதத்திலே கட்டவில்லை என்றால், கலைக்கின்ற அளவு திட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொன்னார்கள். இதை முழுமையாக ஆலோசித்து சட்டப்படி செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல அரசு அளவிலே கூட சீட்டு நிதிச் சட்டத்தை அமுல் படுத்தி சீட்டுக் கம்பெனி நடத்தலாம் என்ற யோசனைகூட சொல்லப்பட்டு ஒரு தனி அதிகாரி இதை ஆய்வதற்காகப் போடப்பட்டிருக்கிறது. கேரளாவிலேகூட அப்படி ஒரு சீட்டு கம்பெனி நடைபெற்று நல்ல முறையிலே இருப்பதாகச் சொல்கிறார்கள்.

(பிற்பகல் 7-20)

ஒரு அறிக்கையைக்கூட அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். முழுமையாக எல்லாச் சீட்டையும் ஒழித்துவிட்டு எல்லாவற்றையும் அரசாங்கமே நடத்தவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்குக் கிடையாது. ஓரளவுக்கு பொது மக்களுக்கு சேமிப்பிலே வசதி வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலே அரசு அதை நடத்த முடியுமா என்பதைக் கருத்தில் கொண்டு அந்த அறிக்கையைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. நலமாக இருக்குமானால், அரசு இன்னும் நல்ல முறையிலே பரிசீலித்து ஒரு முடிவுக்கு வரும். இது ஒரு தற்காலிகமான ஆனால், முன்னால் இருந்ததைவிட அதிகப் பாதுகாப்பு தரக்கூடிய ஒரு திருத்தம் என்ற முறையிலே இதை உறுப்பினர்கள் எல்லாம் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 19/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவர் அவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) தொடர் கூட்டத்தில் ஆற்றப்பட்ட அலுவல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. இந்த ஆண்டு பிப்ரவரி திங்கள் 21-லிருந்து இந்தத் தொடர் கூட்டத்தில் நடந்த நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு :—

மேலவை கூடிய நாட்கள்	30
மேலவை கூடிய நேரம்	71 மணி, 40 நிமிடங்கள்
(21—4—1975 வரை)	
அரசின் சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டவை.	23
கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டவை.	24
ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள்.	35
நிதி நிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள்.	38
அவை முன் கொண்டு வரப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.	7